**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை.**
**முன்னிலை: திரு.S. முகம்மது யூசுப் நவாஸ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.**

**2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 06-ஆம் நாள் சனிக்கிழமை**

**இடைக்கால மனு எண். 2/2025**
**இன்**
**அசல் வழக்கு எண். 2/2021**

செபஸ்தியம்மாள் .... மனுதார் / வாதி

**/ எதிர் /**

1. பார்வர் அம்மாள்
2.ஜெபமாலை
3.வியாகுலமேரி
4.கிளாராபுஷ்பம்
5.ஜோஸ்பின் சகாயரூபி
6.ஜஸ்டின் ஆரோக்கியசெல்வி
7.லீமாரோஸ்
8.சார்லஸ்
9.மெர்சி
10.மாவட்ட ஆட்சியர், சிவகங்கை
11.வட்டாட்சியர், மானாமதுரை
12.சார்பதிவாளர், மானாமதுரை ...எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்
13.வேதநாயகம்
14.ஜேம்ஸ்
15.ஜெனிபர்
16.ராபர்ட் புரூஸ்
17.ஏஞ்சலின்
18.டொமிக்ராஜ் ...எதிர்மனுதார்கள் / புரபோஸ்டு 13 முதல் 18 பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 26.11.2025 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.முத்துராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும், 3, 4, 6, 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பசுமலை அவர்கள் ஆஜராகியும், 10 முதல் 12 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.M.துரைப்பாண்டி அவர்கள் ஆஜராகியும், 1, 2, 5, 8, 9, 13, 14, 18 எதிர்மனுதாரர்கள் தரப்பில்

ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், 15 முதல் 17 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.J.K.சண்முகசேகர் அவர்கள் ஆஜராகியும், எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், இருதரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

1. மனுதாரர் தரப்பில் சிபிசி ஆர்டர் 1 ரூல் 10(2) மற்றும் பிரிவு 151ன் படி எதிர்மனுதாரர்கள் / புரபோஸ்டு 13 முதல் 18 பிரதிவாதிகளை தாவா வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துக்கொண்டு வழக்கை மேல்நடத்த அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்று அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**2) மனுவின் சுருக்கம்:**

மனுதாரரை குறுக்கு விசாரணை செய்தபோது தனது மூத்த சகோதரி செல்வநாயம் அம்மாளுக்கு ஜெபமாலை தவிர வேறு வாரிசுகள் உள்ளதாக கூறியதாகவும், மேற்படி விபரத்தை தனது வயோதிகத்தினால் வழக்கு தாக்கல் செய்தபோது வழக்கறிஞரிடம் தெரிவிக்க தவறிவிட்டதாகவும், தனது மூத்த சகோதரி செல்வநாயம் அம்மாள் வாரிசுகளில் ஜெபமாலை என்பவர் 2ம் பிரதிவாதியாக இருந்துவருவதாகவும், மற்ற வாரிசுகளான வேதநாயகம், ஜேம்ஸ், இறந்துபோன ஜான்போஸ்கோவின் மனைவி, மக்களான ஜெனிபர், ராபர்ட் புரூஸ், ஏஞ்சலின் ஆகியோர்களை இவ்வழக்கில் 13 முதல் 17 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், 2ம் பிரதிவாதி அவரது மகன் டொமிக்ராஜ என்பவருக்கு 21.09.2020ம் தேதியன்று எழுதி வைத்துள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய கோரி 'இ' பரிகாரமாக கோரப்பட்டுள்ளதால், அவரையும் இவ்வழக்கில் 18ம் பிரதிவாதியாக சேர்த்துக்கொண்டு வழக்கை மேல்நடத்த வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 3, 4, 6, 7 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கம் :**

மனுவில் கூறியுள்ள விசயங்களை மனுதாரரே நிரூபிக்க கடமைபட்டவராவார் என்றும், மனுதாரர்/வாதி தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3

வரையான சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யப்பட்டு Further Evidence–க்காக வாய்தா ஏற்பட்டுள்ளநிலையில், வழக்கினை காலதாமதப்படுத்தும் கெட்ட நோக்கத்தில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே தாவா மனு தள்ளுபடிக்குரியது என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4) 10 முதல் 12 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கம் :**

தாவா மனுவில் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர பிறயாவற்றையும் மறுப்பதாகவும், மனுதாரரின் மூத்த சகோதரி இறந்துபோன செல்வநாயத்தின் வாரிசுகள் அனைவரையும் கட்டுப்படுத்தி பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யாமல் ஜெபமாலையை மட்டும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்துவிட்டு தற்போது உடன்பிறந்த சகோதரி வாரிசுகளின் முழுவிபரம் தற்போது தான் தெரியவருவதாக கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும், வேண்டுமேன்றே மறைத்து வழக்கு தாக்கல் செய்துவிட்டு, தங்கள் எதிர்வழக்குரையில் உண்மைதன்மையை கூறியபிறகு மனுதாரர் தாவா மனுவை தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும், எனவே தாவா மனு தள்ளுபடிக்குரியது என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5) இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை: இம்மனு அனுமதிக்கத்தக்கதா/இல்லையா என்பதேயாகும்:-**

மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்புடையதாகவே உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் வழக்கு விசாரணையின் எந்த கட்டத்திலும் நியாயமான நீதியின் நலனுக்கு உட்பட்டு அவசிய தரப்பினர்களை வழக்கில் சேர்க்கலாம்.

இம்மனு அனுமதிக்காமல் போனால், வேறு வழக்கு தாக்கல் செய்து வழக்குகள் பெருகவும், தரப்பினர்களிடையே வீண்குழப்பங்கள் ஏற்படவும் வாய்ப்புள்ளது. எனவே மேலும் வழக்குகள் பெருகுவதை (For Avoiding the Multiplicity of Proceedings) தடுப்பதற்காகவும், நீதியின் நலன் கருதியும் இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

"Audi alteram partem is a Latin phrase meaning 'listen to the other side', or "let the other side be heard as well". It is the principle that no person should be judged without a fair hearing in which each party is given the opportunity to respond to the evidence against them."

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் தாவா மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 டிசம்பர் மாதம் 06ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.12.06 16:54:08 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.12.06 16:54:31 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

**DISTRICT MUNSIF COURT**
**MANAMADURAI**

**ORDER**

**I.A.No. 2/2025**
**in**
**OS. No. 2/2021**

**Dated: 06.12.2025**